

திருவாரூர் மாவட்டம், நன்னிலம் சட்டமன்றத் தொகுதியில், நேற்று நடைபெற்ற தமிழ்நாடு _ தலைகுனியாது மாபெரும் பரப்புரை பொதுக்கூட்டத்தில், கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளரும் கழக நாடாளுமன்ற குழுத் துணைத் தலைவருமான தயாநிதி மாறன் எம்.பி, சிறப்புரையாற்றினார். இதில் திருவாரூர் மாவட்டக் கழகச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான பூண்டி.கே. கலைவாணன் க.தன்ராஜ், ஜெக.வீரபாண்டியன், பா.பிரபாகரன், இளம் பேச்சாளர் தி.தினேஷ் பாபு, வீ.அன்பரசன், எஸ்.ஜோதிராமன், கோ.தட்சிணாமூர்த்தி, வே.மனோகரன், கேப்டன் எஸ்.எம்.செல்வராஜ், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பாக கொளத்தூர் மேற்கு பகுதியில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு மனித விழா 26.2.2026, வியாழக்கிழமை, காலை கொளத்தூர் ஜவகர் நகரில் உள்ள ஸ்டார் விளையாட்டு மைதானத்தில் அமைச்சர் பி.கே.சேகர் பாபு முன்னிலையில் தலைமை பொதுக்குழு உறுப்பினரும் 6 வது மண்டல குழு தலைவர் சரிதா மகேஷ்குமார் தலைமையில் நடைபெற்ற மகளிருக்கான மாபெரும் கூடைப் பந்து போட்டியை திரைக்கலைஞர். கலையரசன், இந்திய கூடை பந்து வீரர் திருமதி.B.S. ஷைலா ஆகியோர் துவக்கி வைத்து பரிசுகள் வழங்கி சிறப்பித்தனர். இப்போட்டியில் மேயர் பிரியா ராஜன், ஐ சி எப் வ.முரளிதரன், எ.நாகராஜன், சி.மகேஷ் குமார் கே சந்துரு, எஸ்.தனசேகர், ம. அசோக்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னாடிகள் செயல் வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## திருநெல்வேலி — விருதுநகர் — ஈரோடு மாவட்டங்களில்

# ரூ.117.65 கோடி மதிப்பிலான டைடல் நியோ பூங்காக்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்!

**சென்னை, பிப்.27-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (26.02.2026) தலைமைச் செயலகத்தில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை தாலுகா, ரெட்டியார்பட்டி கிராமத்தில், ரூ.39.06 கோடி மதிப்பீட்டிலும், விருதுநகர் மாவட்டம், விருதுநகர் தாலுகா, கூரைக்குண்டு கிராமத்தில் ரூ.38.72 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் ஈரோடு மாவட்டம், ஈரோடு தாலுகா, கங்காபுரம் கிராமத்தில் ரூ.39.87 கோடி மதிப்பீட்டிலும், என மூன்று டைடல் நியோ பூங்காக்கள் அமைப்பதற்கு காணொலிக் காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார்.**

மேலும், தைவான் நாட்டை சேர்ந்த ADATA டெக்னாலஜி நிறுவனத்தின் துணை நிறுவனமான ADATA செமிகண்டக்டர் நிறுவனம், ரூ.931 கோடி உறுதிசெய்யப்பட்ட முதலீட்டில் 823 வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் சிப்காட் தொழில் பூங்கா, உயர்தொழில்நுட்ப சிறப்பு பொருளாதார மண்டலத்தில் DRAM memory modules and Flash drives உற்பத்தி ஆலை அமைப்பதற்கும் காணொலிக் காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார்.

மேலும், EROS GEN AI நிறுவனம் IIT Madras ஒத்துழைப்புடன் தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்டுள்ள Large Cultural Voice Models (LCVM) திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாக வெளியிட்டார். இத்திட்டத்தை ரூ.3,600 கோடி உறுதிசெய்யப்பட்ட முதலீட்டில் சுமார் 1,000 உயர் திறன்மிக்க வேலை வாய்ப்புகளை உருவாக்கும் வகையில், சென்னையில் விரிவாக்கம் செய்ய இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

**தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டுள்ள டைடல்**

**பூங்காக்கள் மற்றும் மினி டைடல் பூங்காக்கள்**

2000-ஆம் ஆண்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தொலைநோக்கு பார்வையுடன் சென்னை, தரமணியில் டைடல் பூங்காவை நிறுவி, திறந்து வைத்தார். இது மாநிலத்தில் தகவல் தொழில்நுட்பத்துறை மாபெரும் வளர்ச்சி பெற வித்திட்டது.

தகவல் தொழில்நுட்ப சூழல் அமைப்பினை மாநிலம் முழுவதும் பரவலாக விரிவுபடுத்தும் விதமாக, மதுரை மாநகரில் ரூ.314 கோடி மதிப்பீட்டில், 5.34 இலட்சம் சதுரடி கட்டுமான பரப்பளவுடனும், திருச்சிராப்பள்ளி, பஞ்சப்பூரில் ரூ.403 கோடி மதிப்பீட்டில், 5.58 இலட்சம் சதுர அடி கட்டுமான பரப்பளவுடனும், புதிய டைடல் பூங்காக்கள் நிறுவ மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 18.02.2025 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது. இவற்றின் கட்டுமானப்பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், 5.57 இலட்சம் சதுர அடி கட்டுமான பரப்பளவில், 21 தளங்களுடன் கட்டப்பட்ட பட்டாபிராம் டைடல் பூங்கா, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 22.11.2024 அன்று திறந்து வைக்கப்பட்டது. மேலும், ஓசூரில் ரூ.400 கோடி செலவில் 5 இலட்சம் சதுர அடி பரப்பளவில் டைடல் பூங்கா அமைப்பதற்கான பணிகள் விரைவில் துவங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டங்கள் ஒவ்வொன்றும் 6000 தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த வல்லுநர்களுக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்கும்.

இவை மட்டுமின்றி, டைடல் நியோ லிமிடெட் என்ற சிறப்பு நோக்க நிறுவனத்தின் மூலம் இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை நகரங்களில், 50,000 சதுர அடி முதல் 1,00,000 சதுர அடி கட்டுமான பரப்பளவுடன் மினி டைடல் பூங்காக்களை அமைக்க தமிழ்நாடு அரசு பல்வேறு முன்முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. அதன்படி விழுப்புரம் மினி டைடல் பூங்கா 17.02.2024 அன்றும், தஞ்சாவூர் மற்றும் சேலம் மினி டைடல் பூங்காக்கள் 23.09.2024 அன்றும், தூத்துக்குடி மினி டைடல் பூங்கா 29.12.2024 அன்றும், திருப்பூர் மினி டைடல் பூங்கா 11.08.2025 அன்றும், வேலூர் மினி டைடல் பூங்கா 05.11.2025 அன்றும், காரைக்குடி மினி டைடல் பூங்கா 31.01.2026 அன்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டு சிறப்பான முறையில் இயங்கி வருகின்றன.

மேலும், திருவண்ணாமலை மாவட்டத்தில் மினி டைடல் பூங்கா அமைப்பதற்கு 01.08.2025 அன்றும், நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தில் மினி டைடல் பூங்கா அமைப்பதற்கு 05.11.2025 அன்று,ம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு, அதன் கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும், கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் மினி டைடல் பூங்கா அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் நேற்று (25.02.2026) அடிக்கல் நாட்டப்பட்டது.

இவை மட்டுமின்றி நாகப்பட்டினம், கரூர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய பகுதிகளில் மினி டைடல் பூங்காக்கள் அமைப்பதற்கான அறிவிப்புகள் வெளியிடப்பட்டு இவற்றின் கட்டுமானப்பணிகள் துவங்கப்படவுள்ளன.

**திருநெல்வேலி, விருதுநகர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் மினி டைடல் பூங்காக்கள்**

**அமைப்பதற்கு அடிக்கல் நாட்டுதல்**

தகவல் தொழிற்நுட்பத்தை மாநிலம் முழுவதும் பரவலாக்கும் முயற்சியின் தொடர்ச்சியாக, திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை தாலுகா, ரெட்டியார்பட்டி கிராமத்தில், ரூ.39.06 கோடி மதிப்பீட்டிலும், விருதுநகர் மாவட்டம், விருதுநகர் தாலுகா, கூரைக்குண்டு கிராமத்தில் ரூ.38.72 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் ஈரோடு மாவட்டம், ஈரோடு தாலுகா, கங்காபுரம் கிராமத்தில் ரூ.39.87 கோடி மதிப்பீட்டிலும் மினி டைடல் பூங்காக்கள் அமைப்பதற்கு இன்றையதினம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது. இவை ஒவ்வொன்றும் சுமார் 60,000 சதுர அடி பரப்பளவில் தலா 600 தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள் பணிபுரியும் வகையில் அனைத்து அதிநவீன உட்கட்டமைப்பு வசதிகளுடன் அமைக்கப்படவுள்ளன.

இந்த மினி டைடல் பூங்காக்களின் மூலம் அந்தந்த மாவட்டங்களில் வசித்துவரும் படித்த இளைஞர்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கு அவர்களின் சொந்த மாவட்டத்திலேயே தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பணிகளில் வேலைவாய்ப்பு உருவாக்கப்படுவதுடன், அப்பகுதிகளின் சமூகபொருளாதார வளர்ச்சி மேம்படுவதுடன், மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் உதவும்.

**ஈரோஸ் மீடியா வேர்ல்ட்**

இந்தியாவில் மும்பையை தலைமையிடமாகக் கொண்டு 1977ஆம் ஆண்டு நிறுவப்பட்ட ஈரோஸ் மீடியா வேர்ல்ட் நிறுவனத்தின் தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவு பிரிவான ஈரோஸ் ஜெனரல் AI, ரூ.3,600 கோடி உறுதிசெய்யப்பட்ட முதலீட்டில் சுமார் 1,000 உயர் திறன்மிக்க வேலை வாய்ப்புகள் உருவாக்கும் வகையில் சென்னை, இந்திய தொழில்நுட்ப கழகம் (IITM) ஒத்துழைப்புடன் தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்ட Large Cultural Voice Models (LCVM) திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாக வெளியிட்டார்.

ADATA டெக்னாலஜி கோ., லிமிடெட்

தைவான் நாட்டின் நியூ தைபேயை தலைமையகத்தைக் கொண்ட ADATA டெக்னாலஜி கோ., லிமிடெட் நிறுவனம், DRAM தொகுதிகள், மேசைகணினிகள், மடிக்கணினிகள், கைப்பேசி உபபாகங்கள், சேவையகங்கள் மற்றும் பணிநிலையங்களுக்கான DDR4 மற்றும் DDR5 தகவல் சேமிப்பக தொகுதிகள் போன்ற முக்கிய தயாரிப்பில் ஈடுபட்டுள்ள உலகளாவிய நிறுவனம் ஆகும். மேலும், XPG (எக்ஸ்ட்ரீம் செயல்திறன் கியர்) உயர் செயல்திறன் கொண்ட கேமிங் DRAM, SSDகள், கணினி உபபாகங்கள் உள்ளிட்டவற்றின் உற்பத்தியிலும் ஈடுபட்டுள்ளது.

இந்நிறுவனத்திற்கு முழுவதும் சொந்தமான ADATA செமிகண்டக்டர் பிரைவேட் லிமிடெட் ரூ.931 கோடி உறுதிசெய்யப்பட்ட முதலீட்டில் 823 வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் சிப்காட் தொழில் பூங்கா, உயர்தொழில்நுட்ப சிறப்பு பொருளாதார மண்டலத்தில் DRAM memory modules and Flash drives உற்பத்தி வசதி அமைப்பதற்கு இன்று முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது,

இந்த நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி.அருண்ராய், டிட்கோ மற்றும் டைடல் நியோ மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி, தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் செயல் இயக்குநர் டாக்டர் பு. அலர்மேல்மங்கை, டைடல் செயல் இயக்குநர்

திருமதி அ.கேத்தரின் சரண்யா, IITM இயக்குநர் பேராசிரியர் வி.காமகோடி, ADATA டெக்னாலஜி நிறுவனத்தின் தலைமை இயக்க அலுவலர் சோனிக் ஹ்சீஹ், மூத்த நிபுணர் (நிர்வாகம்) கௌதம் சிங், மேலாளர் தீபக் பால், ஈரோஸ் நிறுவனத்தில் இணை நிறுவனர் திருமதி. ரிதிமா லுல்லா, தலைமை செயல் அலுவலர் விக்ரம் தன்னா, தலைமை சந்தைப்படுத்துதல் அலுவலர் பியூஷ், தலைமை செயற்கை நுண்ணறிவு அலுவலர் அழகர்சாமி மாயன்,

மனோஜ் ஹேமச்சந்தர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

காணொலிக் காட்சி வாயிலாக விருதுநகர் மாவட்டத்திலிருந்து வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# பகுத்தறிவாளர்களை அயோக்கியர்கள் என்று ஒரு நீதிபதி சொல்லலாமா?

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி கேள்வி!

*சென்னை,பிப்.27-*

*பகுத்தறிவாளர்களை அயோக்கியர்கள் என்று ஒரு நீதிபதி சொன்னதற்கு, திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் அளித்துள்ள அடுக்கடுக்கான பதிலடி அறிக்கை நேற்று (25.2.2026) ஆவடி பொதுக்கூட்டம் முடிந்தவுடன் செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளில் ஒன்று -*

*பகுத்தறிவாளர்கள் அயோக்கியர்கள் என்று ஒரு நீதிபதி கூறியுள்ளாரே!*

*கேள்வி: “பகுத்தறிவாளர்கள்தான் உண்மையான அயோக்கியர்கள்!”, “குருவை வணங்குகிறவர்களை அயோக்கியன், முட்டாள், காட்டுமிராண்டி எனச் சொல்லும் பகுத்தறிவாளர்கள்தான் உண்மையான அயோக்கியர்கள், முட்டாள்கள், காட்டுமிராண்டிகள்” என்று கிருஷ்ணகிரியில் நடை*



*பெற்ற நிகழ்ச்சி ஒன்றில் நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் பேசியுள்ளாரே, அதுபற்றி உங்கள் பதில் என்ன?*

*பதில்: பகுத்தறிவாளர்கள் எதையும் காரண காரியத்தோடு சொல்பவர்கள்.*

*கண்மூடித்தனமான மூட நம்பிக்கைகள், ஜாதி இறுமாப்பு, ஆணவம் இவற்றை நியாயப்படுத்துவது ஹிந்து மதத்தில் கடவுள் நம்பிக்கை என்பதால், கடவுள் நம்பிக்கையின் வேர் முட்டாள்தனம்;*

*அதைப் பரப்பி, உயர் ஜாதியினர் ஆதிக்கம் செலுத்துவது யோக்கியமற்ற அயோக்கியத்தனம்;*

*கடவுள் என்ற பெயரால் எதை எதையோ வணங்குவதன் மூலம், மனிதனின் ஆதி காட்டுமிராண்டித்தன பருவகால அறிவு என்பதை அறிவியல் பூர்வமாக விளக்கவே தந்தை பெரியார், மக்களைப் பண்படுத்த அந்தக் கருத்துகளைக் கூறினார். அதற்கு இப்படி ஒரு பதில் அளிப்பது, உரிய சமாதானமாகவோ, அறிவுள்ள வாதம் அடங்கியதாகவோ இருக்க முடியாது என்பதை அறிவு வயப்படாமல், ஆத்திரம், ஆணவம் கொப்பளிக்க பதிலளித்தவர் உயர்நீதிமன்ற நீதிபதியாக உள்ள ஒருவர்.*

*பகுத்தறிவாளர்களை இப்படித் தாக்குவது ஆரியத்திற்குப் புதிதல்ல.*

*கட்டை விரலை தானமாகக் கேட்ட துரோணாச்சாரியாரின் யோக்கியதை என்ன?*

*‘சார்வாகர்கள்’ என்ற சொல்லுக்கு ‘இனிமையானவர்கள்’ என்ற பொருள் உண்டு. அதனை தலைகீழாக்கி, அவர்களை இழிவுபடுத்தியது வைதிகமும், அதன் ஆரியக் கூட்டமும்!*

*சுராபானம், சோமபானம் குடித்த ஆரியர்களிடமிருந்து தங்களை வேறுபடுத்திக் காட்ட, ‘அசுரர்கள்’ என்று அழைத்துக் கொண்டவர்களை இழிவும், கொடுமையும் மிகுந்தவர்கள் என்று ஆக்கியதுபோல, இப்படி தனது அறிவைச் சூன்யமாகக் கொண்டு, ஆவேசப்பட்டிருக்கிறாரே! உயர்நீதிமன்றப் பதவியில் உள்ள ஒருவர் - அப்பதவியின் மாண்பை, மரியாதையை இப்படி குறைக்கலாமா? என்பதே நமது வருத்தம்!*

*இவ்வாறு அவர் தெரிவித்தார்.*



மாதவரம் வடக்கு பகுதி 23 அ வட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் ஆணைப்படி, வெல்லும் தமிழ் பெண்கள் முன்னெடுப்பில் வீடு வீடாக சென்று திராவிட மாடல் அரசின் சாதனைகள் விளக்கும் பணிகளை, மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் முன்னிலையில், வட்டச் செயலாளர் வி. ஆர். குப்பன் தலைமையில் மாதவரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் டாக்டர் ஜெ.அருண் அவர்கள் பார்வையிட்டு துரிதப்படுத்தினார். மகளிர் தொண்டர்அணி மாவட்ட அமைப்பாளர் அம்மு மூர்த்தி, வட்ட நிர்வாகிகள் ராமச்சந்திரன், உசேன் மொய்தீன், சுதாகர், அறிவழகன், பார்பன், முத்துகிருஷ்ணன், அப்துல் சமது, ஹரி, பார்த்திபன், மகளிர் அணி மாவட்டத் துணை அமைப்பாளர்கள் எம். அமுதா, ஆர். சுதா, மகளிர் அணி பகுதி துணை அமைப்பாளர்கள் ஆர்.ஜெயபாரதி, வைலட்ராணி, லாரன்ஸ், சித்ரா உள்ளிட்ட நிர்வாகிகள், வெல்லும் பெண்கள் மகளிர் அணியினர் திரளாக கலந்து கொண்டார்கள்.



எழும்பூர் வடக்குப் பகுதி மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர் திருமதி தேவிகலா கணவர் கே.கோபி இயற்கை எய்தியதையடுத்து, கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், அவரது உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, அவரது உறவினர்களுக்கு ஆறுதல் கூறினார்.


